அனைத்துலகத் தமிழ்க் கல்வி பண்பாடு அறிவியல் மேம்பாட்டு இணையம்
International Tamil Education Cultural Scientific Development Federation

# அரையாண்டுத்தேர்வு 2015-2016
# தமிழ்மொழி

பெயர்:- ______________________________

ஆண்டு 6

150 நிமிடங்கள்

கீழேயுள்ள அறிவித்தல்களை முதலில் வாசிக்கவும்!

- ☐ எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்!
- ☐ விடைத்தாள்கள் ஒவ்வொன்றிலும் உங்கள் பெயரை எழுதவும்!
- ☐ பல்தேர்வு வினாக்களுக்கு மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்து, கூட்டுக்குள் புள்ளடி இடவும்!
- ☐ பகுதி 2 இற்குரிய விடைகளை நீல அல்லது கறுப்பு நிறப் பேனாவால் எழுதவும்!
- ☐ வினாக்களுக்கு விடையளிக்கும் போது வினாக்குரிய எண்ணை விடைத்தாளில் எழுதவும்!
- ☐ itec நிறுவனத்தின் முத்திரையிடப்பட்ட தாள்களில் மட்டுமே விடையளிக்கவும்!
- ☐ ஒவ்வொரு வினா அல்லது வினாப்பகுதியின் இறுதியில் விடைகளுக்குரிய புள்ளிகள் அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ளது.
- ☐ வினாத்தாள், விடைத்தாள்கள் எல்லாவற்றையும் ஒன்றாக்கித் தேர்வு மேற்பார்வையாளரிடம் கையளிக்கவும்!

## பகுதி 1

தரப்பட்டுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து, அதற்குரிய கூட்டுக்குள் புள்ளடி இடுக!

1. ஒருவன் தன்னிலையிலிருந்து தாழாதிருப்பது, தாழ்வு வரும்போது வாழாதிருப்பது
   அ) கொடை ஆ) மானம் இ) ஒழுக்கம் ஈ) பண்பு
   அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

2. காற்றுள்ள போதே தூற்றிக்
   அ) கொல் ஆ) கொழ் இ) கொள் ஈ) கோள்
   அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

3. நல்லவர்களைக் காண்பது
   அ) தீது ஆ) நன்று இ) பகை ஈ) வீரம்
   அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

4. வறுமையால் துன்புற்ற போதிலும் பெருந்தன்மையோடு இருப்பவர்கள்
   அ) கீழோர் ஆ) எதிரிகள் இ) வீரர்கள் ஈ) மேலோர்
   அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

5. எதில் சிறந்தவர்களைச் சான்றோர் என அழைப்பர்?
   அ) அழகில் ஆ) வீரத்தில் இ) கொடையில் ஈ) ஒழுக்கத்தில்
   அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

6. முகம் என்னும் பெயர்ச்சொல்
   அ) பொருட்பெயர் ஆ) சினைப்பெயர் இ) குணப்பெயர் ஈ) இடப்பெயர்
   அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

7. வீடு, மனம் - இச்சொற்களின் பொருள் தரும் ஒரு சொல்
   அ) நாடு ஆ) காடு இ) அகம் ஈ) புறம்
   அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

8. தமிழர் பண்பாடு பல விழுமியங்களை உடையது - இதில் வந்துள்ள செயப்படுபொருள்
அ) தமிழர் ஆ) பண்பாடு இ) உடையது ஈ) விழுமியங்களை
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

9. பழங்கால மக்களின் வாழ்வு எதனுடன் இணைந்திருந்தது?
அ) செயற்கையுடன் ஆ) இயற்கையுடன் இ) பணத்துடன் ஈ) உணவுடன்
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

10. பொய்யாமொழி என்ற சிறப்புப் பெயர் கொண்ட நூல்
அ) சிலப்பதிகாரம் ஆ) தொல்காப்பியம் இ) புறநானூறு ஈ) திருக்குறள்
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

11. தமிழ்மன்னர்களிடம் இருந்த சிறந்த பண்புகளில் ஒன்று
அ) பயம் ஆ) பகை இ) கொடை ஈ) பெருமை
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

12. அஃறிணைக்குரிய பால்களுள் ஒன்று
அ) பெண்பால் ஆ) பலவின்பால் இ) பலர்பால் ஈ) ஆண்பால்
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

13. க் ச் ட் த் ப் ற் - இவை
அ) இடையினமெய் ஆ) வல்லினமெய் இ) மெல்லினமெய் ஈ) குற்றெழுத்துகள்
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

14. எதையும் தங்கள் உடைமை என்று கருதுபவர்கள்
அ) பணமுடையவர் ஆ) அன்புடையவர் இ) கோபமுடையவர் ஈ) அன்பில்லாதவர்
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

15. நீ, நீர், நீங்கள், நீவிர் - இச்சொற்கள் எவ்விடத்திற்குரியவை
அ) தன்மை ஆ) படர்க்கை இ) முன்னிலை ஈ) தன்னிலை
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

16. ஒரு பொருளின் செயலை உணர்த்தும் சொல்
அ) பெயர் ஆ) வினை இ) சினை ஈ) திணை
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

17. பொன் + கதிர் - இதன் புணர்ச்சி
அ) பொன்கதிர் ஆ) பொண்கதிர் இ) பொற்கதிர் ஈ) பொற்க்கதிர்
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

18. உள்ளத்தினின்றும் வெளிப்படும் இயல்புகள்
அ) நாகரிகம் ஆ) வாழ்வு இ) பண்பாடு ஈ) வெளிப்பாடு
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

19. மாங்காய் - இச்சொல்லைப் பிரித்து எழுதினால்
அ) மா + ங்காய் ஆ) மாம் + காய் இ) மாங் + காய் ஈ) மா + காய்
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

20. எழுவாய் என்பது ஒரு வாக்கியத்தில் கருத்தை
அ) முடிக்கும் ஆ) தொடங்கும் இ) நிற்கும் ஈ) பிரிக்கும்
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

21. தமிழுக்கு மட்டும் உரிய சிறப்பு எழுத்து
அ) ழ ஆ) ள இ) ல ஈ) ஞ
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

22. இலங்கைக்கு முதன்முதல் வந்த ஐரோப்பியர்
அ) ஆங்கிலேயர் ஆ) ஒல்லாந்தர் இ) போர்த்துக்கேயர் ஈ) பிரெஞ்சுக்காரர்
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

23. உயர்திணை, பலர்பால், பன்மை, படர்க்கை - இவை பொருந்தும் ஒரு சொல்
அ) நீங்கள் ஆ) கரடிகள் இ) அறிஞர்கள் ஈ) நாங்கள்
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

24. வாழ்க்கை நிகழ்வுகளையும் பட்டறிவுகளையும் எளிமையாக உணர்த்தும் பாடல்கள்
அ) சினிமா ஆ) நாட்டார் இ) தனியார் ஈ) மெல்லிசை
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

25. விழுப்பம் - இச்சொல்லின் பொருள்
அ) உயர்வு ஆ) தாழ்வு இ) எளிமை ஈ) கீழ்மை
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

26. தமிழில் மெய்யெழுத்துக்களின் எண்ணிக்கை
அ) முப்பது ஆ) ஒன்று இ) பதினெட்டு ஈ) இருநூற்றுநாற்பத்தியேழு
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

27. பயனிலையைக் கொண்டு யார், எது, எவை ஆகிய வினாக்களை வினவும் போது தோன்றுவது
அ) பயனிலை ஆ) செயப்படுபொருள் இ) எழுவாய் ஈ) பெயர்ச்சொல்
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

28. தமிழரின் பண்பாடுகளில் சிறந்தது
அ) கதைத்தல் ஆ) விருந்தோம்பல் இ) பொறாமைப்படுதல் ஈ) வருந்துதல்
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

29. இலங்கை அமைந்துள்ள மாவாரி
அ) பசுபிக் ஆ) இந்து இ) அத்திலாந்திக் ஈ) வங்காளம்
அ)☐ ஆ)☐ இ)☐ ஈ)☐

30. காலத்திற்குக் காலம் மாறும் தன்மையுடையது
அ) நாகரிகம் ஆ) மானம் இ) மனம் ஈ) பண்பாடு
அ)☐ ആ)☐ இ)☐ ஈ)☐

(30 புள்ளிகள்)

## பகுதி 2

1) கீழேயுள்ள உரைப்பகுதியைப் படித்து, தரப்பட்டிருக்கும் வினாக்களுக்கு முழுவிடை எழுதுக!

குடும்பத்தோடு அமர்ந்து உணவருந்தும் குழந்தைகளுக்கு அதிக எடை போடுதல், ஆரோக்கியமற்ற உணவை உட்கொள்ளுதல் போன்ற பிரச்சினைகள் குறைகின்றன என ஐக்கிய அமெரிக்காவின் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். பெற்றோரோடு அமர்ந்து வாரத்தில் மூன்று வேளையாவது உணவருந்தும் குழந்தைகளுக்கு உடல் எடை அதிகரிப்பது 12 வீதத்தால் குறைவாக இருப்பதாக எல்லா ஆய்வுகளுமே தெரிவிக்கின்றன.

இவ்வாறானவர்களில் வேண்டாத உணவுப்பொருட்களை உண்பவர்கள் 20 வீதம் குறைவாகவும், உணவுப் பிரச்சினை, உண்ணாமல் இருப்பது என்பன 35 வீதம் குறைவாகவும் மரக்கறி மற்றும் ஆரோக்கியமான உணவுப்பொருட்களை உண்பவர்கள் 24 வீதம் அதிகமாகவும் உள்ளனர்.

குடும்பத்தோடு அமர்ந்து உணவருந்துகையில் போசாக்குப் பயன்பாடு அதிகமாக இருப்பதாக மனோதத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். ஒன்றாக அமர்ந்து உண்ணும் குடும்பம் ஆரோக்கியமான குடும்பம் என்பது இவர்களது கருத்து.

ஐக்கிய அமெரிக்காவின் நோய்க்கட்டுப்பாடு மற்றும் நோய்த்தடுப்பு நிலையத்தின் கருத்துப்படி கடந்த மூன்று தசாப்தங்களாக குழந்தைகளின் உடல் எடை அதிகரிப்பானது மூன்று மடங்கு உயர்ந்துள்ளது. அத்தோடு இந்த எண்ணிக்கை 2008 இல் 20 வீதத்தால் அதிகரித்திருக்கின்றது. இந்த அதிக உடல் பருமன் குழந்தைகளின் சுய மதிப்பீட்டைக் குறைத்து அவர்களை இதய நோய் மற்றும் சர்க்கரை நோய்களுக்கு ஆளாக்குகின்றது. இந்தப் புதிய ஆய்வானது 2 முதல் 17 வயதுடைய 1லட்சத்து 83ஆயிரம் பேரிடம் நடத்தப்பட்டு கண்டறியப்பட்டது.

எல்லா ஆய்வுகளுமே வீட்டில் குடும்பமாக அமர்ந்து உண்ணுவது சிறந்த போசாக்கு உணவைப் பெறக்கூடிய நல்லதொரு வழியாகவே சுட்டிக்காட்டுகின்றன.

1. குடும்பத்தோடு உணவருந்துவதால் குழந்தைகள் பெறும் நன்மை ஒன்று தருக?

______________________________________________________________________

______________________________________________________________________

2. ஒன்றாக அமர்ந்து உண்ணும் குடும்பத்தை எப்படிக் கூறுவர்?

______________________________________________________________________

______________________________________________________________________

3. உடல் எடை அதிகரிப்பதால் ஏற்படும் பிரச்சனைகள் எவை?

______________________________________________________________________

______________________________________________________________________

4. உணவில் போசாக்குப் பயன்பாடு எப்பொழுது அதிகமாக இருக்கும்?

______________________________________________________________________

______________________________________________________________________

5. வீட்டில் குடும்பமாக அமர்ந்து உணவு உண்ணுவது பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?

______________________________________________________________________

______________________________________________________________________

(10 புள்ளிகள்)

2) பின்வரும் பாடலைப் படித்துத் தரப்பட்டிருக்கும் வினாக்களுக்கு விடை தருக!

அம்மா

பேசக் கற்றுக் கொடுத்தவள்
பிணியை அகற்றி வளர்த்தவள்
பாசம் தன்னைப் பொழிந்தவள்
பண்பைச் சொல்லித் தந்தவள்

அம்மா என்று சொன்னாலே
அகத்தில் மகிழ்ச்சி பொங்கிவரும்
தூசு கண்ணில் விழுந்தாலும்
துடிக்கும் அன்னைக்கு இணையுண்டோ!

1. அம்மா எதைக் கற்றுக் கொடுக்கின்றார்?

______________________________

______________________________

2. அம்மா தன் பிள்ளைகளை எப்படி வளர்க்கின்றாள்?

______________________________

______________________________

3. அம்மா என்று சொல்லும் போது ஏற்படும் உணர்வு என்ன?

______________________________

______________________________

4. எமக்குச் சிறிய துன்பம் வந்தாலும் துடிப்பது யார்?

______________________________

______________________________

(10 புள்ளிகள்)

3) கீழேயுள்ள உரைப்பகுதியைப் படித்து, அதன் உள்ளடக்கத்தை வாழிட மொழியில் எழுதுக!

நம் குடும்பத்தினர், சொந்த பந்தம், அயலார் மற்றும் உடன்பயிலுவோர் அனைவரிடமும் நாம் அன்பு காட்ட வேண்டும். இதனுடன் ஓய்வு நேரங்களில் படம் வரைவது, பாடுவது, நூல்கள் படிப்பது, விருப்பமான பொருட்களைத் தயாரிப்பது, வீட்டை அலங்கரிப்பது, நாடகத்தில் பங்கேற்பது போன்றவற்றை முடிந்தவரை கற்றுக்கொள்ள வேண்டும். இவற்றைப் பொழுதுபோக்குகள் என்கின்றோம். பொழுதுபோக்குகளை வளர்த்துக்கொள்வதால் சோர்வு நீங்குகின்றது. எனக்கு எவ்வளவோ தெரியும். என்னால் எதையும் செய்ய முடியும் என்ற நம்பிக்கை வளரும். எமக்கு மகிழ்ச்சியும் நிறைவும் கிடைக்கும்.

(10 புள்ளிகள்)

4) பின்வரும் ஆங்கில வாக்கியங்களைத் தமிழில் மாற்றி எழுதுக!

1. My uncle has got a car.

___________________________________________

2. What would you like to drink?

___________________________________________

3. How many children are there in your family?

___________________________________________

4. Kavitha can´t come to school today.

___________________________________________

5. I cook the dinner every Saturday in the evening.

___________________________________________

(10 புள்ளிகள்)

5) படத்தைப் பார்க்கும் போது உமக்குத் தோன்றுவதை ஐம்பது சொற்களுக்குக் குறையாமல் எழுதுக!

(15 புள்ளிகள்)



6) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து, அறுபது சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை ஒன்று எழுதுக!

அ) கடற்கரையில் ஒருநாள்

ஆ) விளையாட்டுகள்
(அவசியம், வகைகள், கிடைக்கும் நன்மைகள், தமிழர் விளையாட்டுகள்)

இ) தமிழர் திருநாள்

(15 புள்ளிகள்)